**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR**

**DEPOSITION OF WITNESS**

**D.W.2 Summon Witness**

**O.S No. 54/2015**

| | |
|---|---|
| **Name** | **: துரைசாமி** |
| **Father's Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 11.12.2024.**

**பி.வா.சா.2 குறுக்கு விசாரணை:-**

1) என் பூர்விகம் லத்துவாடி கிராம். லத்துவாடி கிராமத்திற்கு தாவா சொத்து உள்ள கவர்பனை கிராமத்திற்கு சுமார் 5 கி.மீ. இருக்கும் என்றால் அதிகமாக இருக்கும். வேப்பபூண்டி கிராமத்தை சார்ந்த காளிமுத்து எனது உறவினர். அய்யம்பெருமாள், புஸ்பம் காளிமுத்துவின் உறவினர்கள். என்னை சாட்சி கையெழுத்து போட காளி முத்து தான் அழைத்து சென்றார். நான் கையெழுத்து போட்ட ஆவணத்தில் என்ன விவரம் என்று தெரியாது. கையெழுத்து போட சொன்னார்கள், கையெழுத்து போட்டேன்.

2) என்ன பத்திரம் என்று கேட்டேன் உயில் பத்திரம் என்று சொன்னார்கள். அந்த பத்திரம் என்ன விவரத்தை படித்து காண்பிக்கவில்லை என்றால் படித்து காண்பித்தார்கள். அந்த பத்திரத்தில் உள்ள சொத்து விவரம் பற்றி தெரியாது. அந்த சொத்து யாருக்கு பாத்தியம் என்று தெரியாது. புஸ்பத்திற்கு எழுதி வைப்பதாக சொன்னார்கள். துரைசாமியின் மனைவி பெயர் தெரியாது. புஸ்பத்தின் அப்பா பெயரும் தெரியாது. புஸ்பமும், துரைசாமியின் மனைவியும் உடன் பிறந்த சகோதரிகள் என்று தெரியாது என்றால் அவர் சொன்னார். நான் செல்லும் போது அய்யம்பெருமாளும், புஸ்பமும் அங்கு இருந்தார்கள். துரைசாமிக்கு அப்போது வயது 85 என்றால் சரிதான். உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. அவர் நன்றாக தான் இருந்தார்.

3) அப்போது வயது 85 என்பதால் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்றும் நான் வழக்கிற்காக நன்றாக இருந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சார் பதிவகம் மற்றும் வட்டாச்சியர் அலுவலகத்திற்கு நானும் என் உறவினர் காளிமுத்தும் ஒன்றாக தான் சென்றோம் என்றால் சரிதான். அதே போல் பத்திரத்தில் எங்கு இருந்தது என்றும், என்னுடன் யார் கையெழுத்து போட்டது தெரியாது என்றால் சரியல்ல. என்னுடம் வீரகனூர்ரை சார்ந்த ஒரு நபர் கையெழுத்து போட்டார். அவர் பெயர், அவருடைய அப்பா பெயர் தெரியாது.

4) பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்ட தேதியில் அய்யம் பெருமாள் மகன் ஜெயராமன் உடன் வந்து இருந்தார். அந்த பத்திரத்தில் அய்யம்பெருமாளோ அவரது மகன் ஜெயராமனோ கையெழுத்து போடவில்லை. அந்த பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போடுவதற்கு அந்த கிராமத்தை உள்ளவர்களை கூப்பிட்டால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் சாட்சி கையெழுத்து போடுவதற்காக என்னையும் காளிமுத்துவையும் கூப்பிட்டார்கள் என்றால் சரியல்ல. உண்மையிலே துரைசாமி சுயநினைவுடன் இருந்து இருந்தால் உள்ளூர்காரர்களை சாட்சியாக கூப்பிட்டு இருப்பார்கள் என்றால் சரியல்ல.

5) அவர்க்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் தான் பொய்யாக உயில் எழுதி வைத்த 3 மாதத்தில் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. அவர் கெங்கவல்லிக்கு பஸ்சில் வந்தார். நான் சொல்வது பொய் என்றும், அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் காரியில் தான் வந்தார் என்றால் சரியல்ல. துரைசாமியை அய்யம்பெருமாளும், ஜெயராமனும் தான் அழைத்து வந்தார்கள். நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Subordinate Judge, Attur.**